# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பொது கலைமாணி (இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழி) தேர்வு - 2018 / 2019
முதலாம் வருடம், பருவம் - II, ஆகஸ்ட் - 2021

## AFM 12023 – INTERMEDIATE ACCOUNTING
## (இடைநிலை கணக்கியல்)

### Take Home Examination

எல்லா வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
(கணிப்பான் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது)

---

**வினா இல :- 01**

**அ).** காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரதான நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்கி, காசுப் பாய்ச்சல் கூற்றின் முக்கியத்துவத்தினை பட்டியலிடுக.

(08 புள்ளிகள்)

**ஆ).** வரையறுத்த அம்னத் கம்பனி 2021.03.31 முடிவடைந்த வருடத்திற்குத் தயாரித்த நிதிக்கூற்று பின்வருமாறு.

**31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று (Income Statement)**

| **விபரம்** | **(ரூபா '000)** |
|---|---|
| விற்பனை | 28,600 |
| விற்பனைக்கிரயம் | (23,900) |
| **மொத்த இலாபம்** | **4,700** |
| வட்டி வருமானம் | 200 |
| பங்கிலாப வருமானம் | 300 |
| பெறுமானத் தேய்வு | (450) |
| நிருவாகச் செலவு | (950) |
| நிதிச் செலவு | (280) |
| **வரிக்கு முன் இலாபம்** | **3,520** |
| வருமான வரி | (470) |
| **வரிக்கு பின் இலாபம்** | **3,050** |
| பங்கிலாபம் செலுத்தியது | (1,200) |
| பகிரப்படாத இலாபம் | 1,850 |

**31.03.2021/31.03.2020 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | **31.03.2021 (ரூபா '000)** | | **31.03.2020 (ரூபா '000)** | |
|---|---|---|---|---|
| **நடைமுறையறையல்லாச் சொத்து** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயம்) | 3,970 | | 2,370 | |
| திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு | 1,210 | 2,760 | 940 | 1,430 |
| | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| குறுங்கால முதலீடு | 3,020 | | 3,020 | |

| | | | | |
|---|---|---|---|---|
| இருப்புக்கள் | 2,920 | | 2,580 | |
| கடன்பட்டோர் | 2,320 | | 2,040 | |
| காசு | 230 | 8,490 | 160 | 7,800 |
| | | **11,250** | | **9,230** |
| சாதாரண பங்கு | 2,250 | | 2,000 | |
| நிறுத்தி வைத்த இலாபம் | 3,940 | 6,190 | 2,090 | 4,090 |
| **நடைமுறையல்லாப் பொறுப்பு** | | | | |
| வங்கிக் கடன் | 3,410 | 3,410 | 2,150 | 2,150 |
| **நடைமுறையறைப் பொறுப்பு** | | | | |
| கடன் கொடுத்தோர் | 1,020 | | 1,890 | |
| செலுத்த வேண்டிய வட்டி | 210 | | 120 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 420 | 1,650 | 980 | 2,990 |
| | | **11,250** | | **9,230** |

மேலதிக தகவல்கள் பின்வருமாறு:

ரூபா 300,000 கிரயமுடையதும், ரூபா 180,000 வரையில் பெறுமானத் தேய்விடப்பட்டதுமான ஆதனம்மொன்று ரூபா 120,000 வுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:-**

இலங்கைக்கணக்கீட்டு நியமம் 7க்கு அமைவாக நேர் முறையிலான காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்குக.

(17 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா இல :- 02**

**அ)** கணக்கீட்டு விகிதங்களின் பிரயோகத்தினால் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

**ஆ)** பின்வரும் கணக்கீட்டு விகிதங்களின் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

I. நடைமுறை விகிதம் Vs விரைவு விகிதம்

II. பங்கு ஒன்றுக்கான பங்குலாபம் Vs பங்கு ஒன்றுக்கான உழைப்பு

III. கடன்பட்டோர் புரள்வு விகிதம் Vs கடன்கொடுனர் புரள்வு விகிதம்

(06 புள்ளிகள்)

**இ).** வரையறுப்பட்ட ஆகீபா கம்பனியின் 2021.03.31 முடிவடைந்த வருடத்திற்குத் தயாரித்த நிதியறிக்கைகள் பின்வருமாறு.

**31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று (Income Statement)**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனை | | 1,200,000 |
| (-) விற்பனைக் கிரயம் | | (900,000) |
| மொத்த இலாபம் | | 300,000 |
| (-) **செயற்பாட்டு செலவு** | | |
| நிருவாகச் செலவுகள் | 55,000 | |
| விநியோகச் செலவுகள் | 60,000 | |
| வட்டி செலவு | 10,000 | (125,000) |
| வரிக்கு முன் இலாபம் | | 175,000 |
| (-) வருமான வரி | | (40,000) |
| ஆண்டுக்கான இலாபம் | | 135,000 |

**31.03.2021 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| நடைமுறையறையல்லாச் சொத்து | | 180,000 |
| (-) திரண்ட பெறுமானத் தேய்வு | | (40,000) |
| | | 140,000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | 480,000 |
| | | 620,000 |
| | | |
| பங்கு மூலதனம் | | 310,000 |
| பொது ஒதுக்கம் | | 50,000 |
| பகிரப்பாடத இலாபம் | | 40,000 |
| உரிமை மூலதனம் | | 400,000 |
| | | |
| தொகுதிக் கடன் | | 100,000 |
| நடைமுறையறைப் பொறுப்பு | | 120,000 |
| | | 620,000 |

மேற்படி தகவல்களை உபயோகித்து பின்வரும் விகிதங்களை கணிப்பீடுக.

I. மொத்தலாப வீதம்
II. தேறியலாப வீதம்
III. வட்டி காப்பு விகிதம்
IV. நடைமுறை விகிதம்
V. மொத்த சொத்து மீதான திரும்பல் விகிதம்
VI. உரிமை மூலதனம் மீதான திரும்பல் விகிதம்
VII. கடன் உரிமை இணைவு விகிதம்

(15 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா இல :- 03**

**அ).** வரையறுக்கப்பட்ட அய்ஸ் கம்பனி 100,000 சாதாரண பங்குகளை ஒவ்வொன்றும் ரூபா 20 விலையில், பின்வருமாறு பணம் செலுத்துதல் வேண்டும் என்ற அடிப்படையில் பங்குகளை வழங்கியுள்ளது.

- மனுவின் போது பங்கொன்றுக்கு ரூபா 8 படி
- ஒதுக்கலின் போது பங்கொன்றுக்கு ரூபா 12 படி

150,000 பங்குகளுக்கு விண்ணப்பங்களை பெற்ற கம்பனி, மேலதிகமான மனுப்பணத்தை திருப்பி அனுப்பி பங்குகளை ஒதுக்கல் செய்து, ஒதுக்கல் பணத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

**வேண்டப்படுவது:-**

மேற்கூறப்பட்ட பங்கு வழங்கலுக்கான நாட்குறிப்பு பதிவுகளை காட்டி, மனு ஒதுக்கல் கணக்கு, கூறப்பட்ட மூலதனக் கணக்கு மற்றும் வங்கிக் கணக்கு ஆகியவற்றின் உரிய பேரேட்டு பதிவுகளையும் தருக.

(10 புள்ளிகள்)

**ஆ).** அதீபா நிறுவனம் ஆற்றுக்கு மேலால் பாலம் ஒன்று கட்டுவதற்கான ஒப்பந்தத்ளை ஏற்றுக்கொள்கின்றது. இவ் ஒப்பந்தத்தின் பெறுமதியானது 1,250,000 ரூபாவாக இணங்கப்பட்டது. 31 மார்ச் 2021 இல் உள்ள மீதிகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| நிர்மானிப்புக்காக பயன்படுத்திய ஊழியம் | 405,000 |
| பயன்படுத்திய நேர் மூலப்பொருட்கள் | 420,000 |
| களஞ்சியத்தில் இருந்தான மூலப்பொருட்கள் பாவனை | 81,200 |
| வாடகையும் பொறிப்பாவனை | 12,100 |
| நேர்ச் செலவுகள் | 23,000 |
| மேந்தலைகள் செலவுகள் | 37,100 |
| 31.03.2021 மூலப்பொருள் கையிருப்பு | 6,300 |
| 31.03.2021 செலுத்தவேண்டிய ஊழியம் | 7,800 |

மேலதிக தகவல்கள்

- வருட இறுதியில் செலுத்தப்படாமல் இருந்த நேர்செலவுகள் ரூபா 2,000
- பொறியியலாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட வேலை ரூபா 1,100,000
- உறுதிப்படுத்தப்படாத வேலை ரூபா 16,500
- ஒப்பந்தத்தின் பேரில் பெறப்பட்ட காசு ரூபா 880,000

**வேண்டப்படுவது:-**

மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, நிர்மானிப்புக்கான ஒப்பந்தக் கணக்கினை தயார் செய்க. (Retention Money 20% எனக் கொள்க)

(15 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா இல :- 04**

**அ).** நிதிக் குத்தகைக்கும், செயற்பாட்டுக் குத்தகைக்கும் இடையிலான வேறுபாட்டினை ஒப்பிடுக.

(05 புள்ளிகள்)

**ஆ).** ஒரு குத்தகை உடன்பாட்டை நிதிக் குத்தகையாக இனங்காண்பதற்காக இருக்க வேண்டிய அம்சங்களை பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

**இ).** ABC நிறுவனம் ஐந்து வருடங்களைக் கொண்ட நிதிக்குத்தகை ஒன்றினை மேற்கொண்டுள்ளது. 01.01.2016 இல் ஆரம்பமாகின்றது. வருடாந்த வாடகையாக ரூபா 60,000 ஆகும். இது வருட ஆரம்பத்தில் செலுத்துவதென இனங்கப்பட்டது. இயந்திரத்தின் காசுப் பெறுமதியானது ரூபா 250,200 ஆகும். இவ்வியந்திரமானது எவ்வித இறுதிப் பெறுமதியினையும் கொண்டிராது என மதிப்பீடு செய்யப்பட்டது. குறித்த நிறுவனமானது மிகுதியாக உள்ள தொகைக்கு வருடாந்தம் 10% நிலையான கொடுப்பனவு (வட்டி) ஒன்றினை செலுத்துவதற்கு குத்தகைக்கு பெற்றவர் இணங்கிக் கொண்டார்.

ஒவ்வொரு வாடகைக் கொடுப்பனவிலும் நிலுவையாக உள்ள தொகையினையும் செலுத்த வேண்டிய தொகையினையும் Actuarial Method இனைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்வதற்கான கூற்றினை தயார் செய்க. (பின்வரும் மாதிரியினைப் பயன்படுத்துக)

| **வருடம்** | **ஆரம்ப மீதி** | **வருட வாடகை** | **செலுத்த வேண்டிய தொகை** | **நிதிக்கிரயம்** | **இறுதி மீதி** |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(15 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

*****SIN*****